செய்தி வெளியீடு எண்: 172 நாள்: 24.02.2011.

# முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்ட முடிவுகள்!

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 24.2.2011 அன்று மாலை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், தலைமைச் செயலாளர் திருமதி சு.மாலதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. ரா. சிவகுமார், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப., அலுவல்சாரா உறுப்பினர்கள் குன்றக்குடி தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு.எஸ்.வி. பாலசுப்பிரமணியன், மருத்துவர் திருமதி சுதா சேஷய்யன், திருவாவடுதுறை ஆதீன பிரதிநிதி தவத்திரு சுப்பிரமணிய தம்பிரான் சுவாமிகள், திருவரங்கம் ஆண்டவன் சுவாமிகளின் பிரதிநிதி திரு. ஆர். ராஜகோபால், திருப்பனந்தாள் ஆதீன பிரதிநிதி திரு. சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள், சிறப்பு அழைப்பாளர் தருமபுர ஆதீனத்தின் பிரதிநிதி மௌனகுமார சுவாமி தம்பிரான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் விவரம்:**

1. உயர்நிலை ஆலோசனைக் குழுவின் அலுவல்சாரா உறுப்பினராகத் திகழ்ந்த திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் 16.10.2010 அன்று இயற்கை எய்தியதனை முன்னிட்டு, அன்னார் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. 2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் தமிழகத் திருக்கோயில் பணியாளர்களுக்கு முதன் முறையாகத் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**அத்திட்டத்தின்படி, தற்போது வழங்கப்பட்டுவரும் மாத ஓய்வூதியம் 800 ரூபாய் என்பதை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்; இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத கிராமக் கோயில் பூசாரிகளுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் 750 ரூபாய் என்பதை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. இதன் காரணமாக 2 ஆயிரத்து 376 திருக்கோயில் பணியாளர்களும், 4 ஆயிரம் கிராமக் கோயில் பூசாரிகளும் பயன் அடைவார்கள்.**

3. **1997ஆம் ஆண்டு வரை திருக்கோயில்கள் திருப்பணிகளுக்கு அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்த 45 இலட்சம் ரூபாய் 1998ஆம் ஆண்டில் 75 இலட்ச ரூபாயாகவும்; 2008இல் 75 இலட்சம் ரூபாயிலிருந்து 3 கோடி ரூபாயாகவும் இந்த அரசு உயர்த்தி ஆணையிட்டு திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 5000 கோயில்–களுக்கு திருப்பணிகள் செய்து குட முழுக்குகள் நடத்தப்பட்டுள்ள நிலையில், மேலும் பல திருக்கோவில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளமையால், ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு மானியத்தை 3 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தி வழங்கிட ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.**

4. **கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப் படாத திருக்கோயில்களின் திருப்பணிகள் மற்றும் நிருவாகச் செலவினங்–களுக்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நிருவாகத்தின்கீழ் தற்போது 490 திருக் கோயில்களும், ஒரு மகளிர் கல்லூரியும், 4 பள்ளிகளும் உள்ளன; 759 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் திருப்பணிச் செலவுகள் அதிகரித்து வருவதனைக் கருத்தில் கொண்டு சுசீந்திரம், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக் கோயில் நிர்வாகத்திற்கு வழங்கப்படும் ஒரு கோடி ரூபாய் அரசு மானியத்தினை 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது.**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**